
ISSN 2792 - 1050

# வெண்ணிலா


காலாண்டிதழ்.
QUARTERLY.

වෙණ්ණිලා - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.
















50/=

2வது ஆண்டு - இதழ்: 05 - ஏப்ரல் 2022.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை மாநகரில் (அமானா வங்கி முன்பாக) ...

- நேரடியாக சகலவிதமான விமான பயண டிக்கற்களை உடனடியாக பெற்றுக் கொள்வதோடு
- Budget & Economy வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாடுகள் (India, Maldives, Thailand & Europe)
- வெளிநாடு ஒன்றிற்கு குடிபெயர்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள்
- Other Air ticketing related services
- Hajj & Umra Arangements
- Visa related Assistances
- Student Visa Guidance

IATA

Since 1986

**MH Travels & Tours**

*Ur Travel & Progress Companion*

No. 9, Main Street, Kalmunai. Hotline : 077 067 3062
Head Office : 323, Maccamady Road, Maruthamunai - 03. Tel : 067 222 9486
mhtravelsntours@gmail.com Tel : 067 205 9434, 075 808 9968

**Business & Tax consultation in the Heart of Kalmunai Town...**

- Tax Planning
- Income Tax
- VAT / SVAT
- NBT / ESC (old)
- CGT
- PAYE / APIT (Employer)
- Agribusiness consultation
- Audit
- Accounts Preparation
- IAS / IFRS, LKAS / SLFRS Consultancy
- Book Keeping
- Outsourcing services
- POS Solution
- Cooperate Secretarial Services

**Elite**

**Biz & Tax Consultancy**

No. 10, Main Street, Kalmunai. M : 077 067 3062
Tel : 067 205 9434, info@elitetaxcon.com, www.elitetaxcon.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா

வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.

**2வது ஆண்டு... இதழ்: 05 - ஏப்ரல் 2022. ISSN 2792 - 1050**


வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.


**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்.**

**முகவரி:**
**378/2, ஸம் ஸம் வீதி,**
**மருதமுனை - 03 # 32314,**
**இலங்கை.**

**மின்னஞ்சல்:**
kavignarsagaffar@gmail.com
**தொடர்பு:**
07 5858 5656 / 077 6968 671.
**வட்ஸ்அப்:**
077 6968 671.



**Digital Printing:**
S. A. Jezeem,
Jesa Grafk,
Main Street, Maruthamunai.

**Information Technology:**
A. G. Afraan Muhammed
(University of Ruhuna.)

**Layout Design:**
S. A. Abdul Gaffar DICP, DIHE & DIEC.

**Published by:**
Digital Information System (DIS)


**சந்தா விபரம்:**
தனி இதழ் ரூபா. 50/=
நான்கு இதழ்களுக்கான ஆண்டுச் சந்தாத் தொகை ரூபா. 200/=. வெண்ணிலா அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்த முடியும்.

தபாலில் பெற்றுக்கொள்ள நான்கு இதழ்களுக்கான ஆண்டுச் சந்தாத் தொகை ரூபா. 340/= நீங்கள் செய்யவேண்டியது:
Mr. S. A. ABDUL GAFFAR, BANK OF CEYLON, A/C No.: 6106068 என்ற இலக்கத்திற்கு ரூபா. 340/= சந்தாத் தொகையைச் செலுத்திவிட்டு உங்கள் முகவரி மற்றும் விபரங்களை kavignarsagaffar@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது 0776968671 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கோ அனுப்பிவைக்கவும்.



**பொன் விழாக் காணும்**
**பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களைப் பாராட்டி, வாழ்த்துகளை அள்ளிச் சொரிவதில் 'வெண்ணிலா' பெருமிதமடைகிறது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

**இரங்கல்:**
- நாவலாசிரியர் செ. கணேசலிங்கன்........5

**குறிப்பு:**
- பன்னூலாசிரியர் நூறுல் ஹக்........6

**தடம் பதித்த மூத்த கவிஞர்கள்:**
- பயணம் - கவிஞர் மருதூர்க்கனி 9
- பத்துமுறை பிறந்தாலும்! - கவிஞர் பாண்டியூரன் 10
- படைப்பு - கவிஞர் அன்பு முஹைறதீன் 11
- பிரசவம் - ஆசுகவி அன்புடீன் 12

**வெண்ணிலாக் கவிதைகள்:**
- கனவுகளும் காணிக்கையும் - ஜலால்டீன் மஹாகவி 13
- பள்ளிக் காலம் - கவிஞர் சு. சின்னத்தம்பி 14
- வெற்றிவாகை சூடு - கவிதாயினி Dr. ஜலீலா 15
- அழகிய கனவே - கவிஞர் வசந்ததீபன் 16
- மனிதனை வாசிக்கும் புத்தகம் - கவிஞர் மருதமுனை விஜிலி 17
- எழுத்தால் ஏற்றம் தருவாய் - கவிஞர் ஜமால்தீன் 18
- ஆன்மீகச் செழுமை அவனியில் - கவிஞர் புன்னகை வேந்தன் 19
- கேட்டயாடி சங்கதிய... - எழுகவி 20
- மயானம் - கவிதாயினி எம். ஏ. மாஹிறா 21
- வீழ்வேனென நினைத்தாயோ - கவிதாயினி வானம்பாடி முஜா 22
- நாளை... - கவிஞர் எம் சீ யே பரித் 23

**படித்தவற்றில் பிடித்தவை:**
- அப்பாவின் சாய்வு நாற்காலி - கவிஞர் துளசி வேந்தன் 24
- சருகாய் - கவிஞர் பரீட்சன் 25
- இருளுடன் விளையாடுகிறது மனசு - கவிஞர் கார்கவி 26
- பேராசை - கவிதாயினி பாத்திமா ஸுபா 27
- பஞ்சு மிட்டாய் விற்பவன் - கவிஞர் ஜமீல் 28
- மண்ணறை - கவிஞர் ஏரூர் கே. நௌஷாத் 29
- மாற்றம் - கவிதாயினி தி. கலையரசி 30
- கன்னத்தில் பலூன் - கவிஞர் அ. முத்துசாமி 31
- வேண்டுமொரு காடு - கவிதாயினி கோ. லீலா 32
- ஒரு முதுமையின் செவிக் குறிப்பு - கவிஞர் எம் எச் ஏ கரீம் 33
- தேனிசை மழை - கவிஞர் டீன் கபூர் 34
- ஹைக்கூ கவிதைகள் - ராஜகவி ராகில் 35
- நுண் மதிக் கவிதைகள் - கவிஞர் எம் எம் நவ்பல் 36

**முகநூல் பதிவு:**
- வெயில் வேளையில் வீடு வந்து... - நாட்டார் கவி நாயகன் எழுகவி 37

**உங்களிடமிருந்து** ........38




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செ. கணேசலிங்கன்

யாழ்ப்பாணம், உரும்பிராய் கிராமத்தில் நடுத்தர விவசாயக் குடும்பத்தில் 1928ல் பிறந்தவர். அரச சேவையில் பல வருடங்கள் சேவையாற்றி 1981ல் ஓய்வு பெற்றவர். 1950 காலப் பகுதிகளில் முற்போக்கு இலக்கிய சிந்தனைகளோடு தடம்பதித்த செ. க. என அழைக்கப்பட்டவர் எழுத்தாளர் செ. கணேசலிங்கன் அவர்கள். ஆரம்ப காலத்தில் சிறுகதைகள் மூலம் அறியப்பட்டிருப்பினும் பின்னர் அவரது நாவல்களும் கடித இலக்கியமும் மக்கள் மத்தியில் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றன என்பது மறக்கவோ அன்றி மறுக்கவோ முடியாத உண்மை.

1950ல் எழுத ஆரம்பித்த கணேசலிங்கன் அவர்கள் இறக்கும் வரை எழுத்துத்துறையிலும் பதிப்புத் துறையிலும் ஈடுபட்டு வந்தவர்.

1958ல் தனது "நல்லவன்" எனும் முதலாவது சிறுகதைத் தொகுதியையும் சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற "நீண்ட பயணம்" (1965), "சடங்கு" (1966), "செவ்வானம்" (1967), "தரையும் தாரகையும்" (1968), "போர்க்கோலம்" (1969), "மண்ணும் மக்களும்" (1970) போன்ற பல நாவல்களையும் வெளியிட்டவர். அத்துடன் தீவிர வாசிப்பு, தேடல், நூலாக்கம், படைப்பாக்க முயற்சி போன்றவை அவரது பிற்கால வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிந்தன. சிறுகதை, நாவல், கடித இலக்கியம், சிறுவர் இலக்கியம், கட்டுரை, ஆய்வு, பெண்ணிய இலக்கியம் போன்ற எல்லா



09-03-1928 - 04-12-2021

பரப்புகளிலும் தன் திறமையினை வெளிக்கொணர்ந்தவர். ஈழத்துச் சூழலில் ஏற்பட்ட சில தவிர்க்க முடியாத நிலமைகளினால் தமிழகம் சென்று பதிப்புத் துறையில் முழுமையாக ஈடுபட்டு வந்தார்.

இடதுசாரி இலக்கியத்தை சாதாரண வாசகர் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கில் "குமரன்" எனும் இதழையும் நடத்தி வந்தார். 1971-1990 வரையிலான காலங்களில் "குமரன்" தொடர்ந்து வெளிவந்தது மட்டுமல்லாது மாணவர் மத்தியில் பெரிதும் வரவேற்பையும் பெற்றது. இன்றும் தலைநகரில் இயங்கிவரும் குமரன் பதிப்பகம் இவரது மகன் குமரன் அவர்களினால் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

04-12-2021ல் இவ்வுலகைவிட்டுப் பிரிந்த அன்னாரது மறைவு இலக்கிய உலகிற்குப் பேரிழப்பாகும். ஆத்மா சாந்தியடைய நாமும் பிராத்திப்போம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட
ஊடகவியலாளர்,
பன்னூலாசிரியர்,
எழுத்தாளர் -

- மருதூர் ஜமால்தீன் -

# மறக்கமுடியாத ஆளுமை

# எம். எம். நூறுல் ஹக்.

கிழக்கு மண்ணில் எழுத்துப் பணியை இலக்குடன் செய்து வாழ்ந்தவர்களில் பலர் மறைந்திருக்கிறார்கள். அதிலும் அண்மையில் (2021-01-25) எம்மை விட்டுப் பிரிந்த பன்னூல் ஆசிரியர் நூறுல் ஹக் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவராவார்.

எழுத்து, பேச்சு, வாசிப்பு, ஆன்மீகம் எனப் பல்வேறுபட்ட திறமைகள் அவரிடம் ஒருங்கிணைந்து குடிகொண்டிருந்ததை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் ஏற்றுக்கொள்வர்.

தனது எழுத்து எதுவானாலும் அதனை சமுகத்தின் சிந்தனைக்காக அதை மக்கள் மன்றத்தில் பதியம் விடுவதற்காக ஆதாரங்களை புள்ளி விபரங்களுடன் தனது நேர்மையான கருத்துக்களுடன் ஒப்படைப்பது அவரது தனித் திறமையாக விளங்கியது. இவரது எண்ணவோட்டமும் சிறுபான்மை சமுகத்தை மையப்படுத் தியதாகவே காணப்பட்டது.

எவருக்கும் அஞ்சாத தைரியம், தனது கருத்துக்களில் பொதிந்திருப்பது அனைத்துமே உண்மையும் நேர்மையுமே என வாதிட்டு வெல்லும் திறமை பணம், பதவி, செல்வாக்கு போன்றவற்றுக்கு அடிபணியாத தன்மை "சமுகப்பற்று ஈமானின் பாதி" என்ற நபிமொழிக்கேற்ப தனது படைப்புகள் மூலம் அல்லாஹ்விடத்தில் வெகுமதி பெற வேண்டுமென்ற ஆசையும் அவரிடம் நிறைந்திருந்தது. பெயரும் புகழும் தன்னை அடைய வேண்டுமென்ற நோக்கோடு அவரது எந்தப் படைப்புகளுக்கும் பேனை பதித்ததே கிடையாது. சான்றாக சமுகத்திற்கெதிராக அவ்வப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழும் அநியாயங்களுக்கும் அத்துமீறல் களுக்கும் எதிராக நடுநிலைமையோடு பக்கசார்பின்றி எழுதும் அவரது தனித் திறமையை சகல சமூகங்களும் ஏற்றுக்கொண்ட கணிப்பே அதிகம் காணக்கிடக்கின்றது.

மிக எளிமையாக தனது வாழ்வை அமைத்துக்கொண்டு வாழ்ந்த அவர் தனக்கு நாடி வருவதைத் தவிர பிறரிடம் எதையும் எதிர்பார்க்காதவர். எவரிடமும் எதற்காகவும் தனது கொள்கைப் பிடிப்பை விட்டுக்கொடுக்காத போதிலும் அதில் நேர்மையிருப்பதை நிருபித்துக்காட்டியவர். மிகக் குறுகிய வயதில் நிறைய சாதித்துவிட்டே இவ்வுலகிற்கு விடைகொடுத்திருக்கிறார். இத்தகைய ஓர் ஆய்வாளனை, சத்திய எழுத்தாளனை எமது கிழக்கு மண் பெறுவதற்கு இன்னும் எத்தனை காலம் காத்திருக்க வேண்டுமோ தெரியாது.

எதிர்கால எதிர்வு கூறலுடன் காலக் கணிப்பீட்டை முன்வைத்து அவர் தந்த நூற்கள் சமூகத் தேடல் உள்ளவர்களுக்கும் ஆய்வாளர் களுக்கும் மிகப் பெறுமதியான தரவுகளுடன் விளங்குவதைக் காணலாம். இவை அவரின் ஆற்றலைப் பறைசாற்றப் போதுமான சான்றுகளாகும்.

இலக்குடனும் இலட்சியத்துடனும் எழுத்துப்பணி செய்து சிரித்த



**பிறப்பு: 27-08-1964**
**இறப்பு: 25-01-2021**

முகத்துடன் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற எமதன்பு நண்பன் நூறுல் ஹக்கின் சமூகத்திற்கான அவரது எண்ணக் கருக்களைச் சுமந்து வைத்திருக்கும் நாம் அவரது ஈருலக ஈடேற்றத்திற்கு பிராத்தனை செய்வதுடன் அவரது பணிகளை முன்னெடுத்துச் செல்லும் சமூக விடிவுக்காக எம்மாலான பங்களிப்புகளைச் செய்வதே அவருக்குச் செய்யும் நன்றியாகும். இறைவன் அவரது பணிகளைப் பொருந்தி மண்ணறை வாழ்வைப் பிரகாசிக்கச் செய்வானாக.

தொடர்ச்சி 8ம் பக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7ம் பக்கத் தொடர்ச்சி...

**கிடைத்த விருதுகள்**

- இளம் படைப்பாளருக்கான இலக்கிய ஆளுமைக்கான விருது 2002.
  (இஸ்லாமிய ஆய்வு நிலையமும் இலங்கை தென்கிழக்கு ஆய்வு மையமும் இணைந்து வழங்கியது.)
- "காதிபுல் ஹுதா" 2006.
  (நேரிய எழுத்தாளர்)
  ஒளியின் சிறகுகள்
  (அபாபீல்கள் கவிதா வட்டம்)
- ஆக்க நினைவு விருது 2006.
  (வெற்றி மாத இதழ்)
- ஊடகப் பணிக்கான நினைவுச் சின்னம் 2007.
- சமூக சேவைக்கும் எழுத்துப் பணிக்குமான விருது 2007.
- சாகித்திய விருது 2012.
- ஊடகப் பணிக்கான நினைவு விருது 2015.
- இலக்கியப் பணிக்கான கௌரவ விருது 2016.
- கலைஞர் சுவதம் விருது 2017.
- சமூக சேவைக்கான நினைவுச் சின்னம் 2020.
- குரு மகுடம் விருது 2020.
- ஊடகத் துறைக்கான வித்தகர் விருது 2020.
  (கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்)
  வித்தகர் விருதுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட நிலையிலேயே எம்மைவிட்டுப் பிரிந்தார்.

**வெளியீடுகள்:**

(1) அல்ஹுதா.
(காலாண்டிதழ்)

(2) வலிமார்களும் வஸீலாத் தேடல்களும். 1988.
(இஸ்லாமிய ஆய்வு)

(3) ஈதுல் பித்ர் சிறப்பு மலர்.
(1993 மார்ச்)

(4) ஈதுல் அழ்ஹா. (1993 ஜுன்)

(5) தெரிந்த விடைகளுக்கான கேள்விகள் 1996.
(மருதம் கலை இலக்கிய வட்டம்)

(6) தீவும் தீர்வுகளும் 1998.
(அரசியலும் வரலாறும்)

(7) சிறுபான்மையினரின் சில அவதானங்கள் 2002.
(அரசியலும் வரலாறும்)

(8) முஸ்லிம் பூர்வீகம் (2006)

(9) ஈமானியப் பேரொளிகள் 2009.
(இஸ்லாமிய ஆய்வு.)

(10) அரசியல் சிந்தனைத்துவமும் சமூக இருப்பும் 2011.
(இந்நூல் 2012ம் ஆண்டில் கிழக்கு மாகாண சபையின் சாகித்திய விருதைப் பெற்றது.)

(11) முஸ்லிம் அரசியலின் இயலாமை.
(2016)

(12) யார் துரோகிகள்?
சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை
(2017)

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் பதித்த மூத்த கவிஞர்கள்.

தொடர்: 02

## பயணம்!

ஆழக்கடலில் போகிறேன்!
அழகுப்பயணம் தொடர்கிறேன்!
ஊழிக்காலம் வரையிலும்
ஒளியில் ஓடம் விடுகிறேன்!!

கச்சான் பெயர்கிறது!
கடலும் இரைகிறது!!
அஞ்சாமல் என்னுடைய
அழகோடம் போகிறது!
சூறை எழுகிறது!
சுழற்றி அடிக்கிறது!
பாறைகளில் மோதாமல்
பக்குவமாய்ப் போகிறது!
ஆழக்கடலில் போகிறேன்!
அழகுப்பயணம் தொடர்கிறேன்.

வானம் இடிக்கிறது!
வையம் அதிர்கிறது!!
தானம் தவறாது
தடம்மீதே போகிறது!
முகில்கள் கறுக்கிறது!
மழையும் பொழிகிறது!
ககனத் திடையேமின்
கீற்றும் தெறிக்கிறது!
ஆழக்கடலில் போகிறேன்!
அழகுப்பயணம் தொடர்கிறேன்.


வேளாமீன் சீறி
வெறியோ டெழுகிறது!
வாளால் எனைவீசி
வீழ்த்திடவே பாய்கிறது!!
வெண்ணெய்ச் சுருஎவ்வி
வாயைப் பிளக்கிறது!
எண்ணம் தடுமாறி
என்னை அலைக்கிறது

ஆழக்கடலில் போகிறேன்!
அழகுப்பயணம் தொடர்கிறேன்.
விடிவின் இதழ்களிலே
வேதம் ஒலிக்கிறது!
முடிவில் முழுமை எனும்
மேகம் பொழிகிறது!
இரத்தக் களரியிலே
இருள்கள் மடிகிறது!
வருத்தத் துடனேதான்
வாய்மை மலர்கிறது!!

ஆழக்கடலில் போகிறேன்
அழகுப்பயணம் தொடர்கிறேன்!
ஊழிக் காலம் வரையிலும்
ஒளியில் ஓடம் விடுகிறேன்!

●●●

**கவிஞர்**
**மருதூர்க் கனி.**



நன்றி: **'கவிஞன்'** காலாண்டுக்
கவிதை இதழ் 1.
(மார்ச் 1969.)
(தொகுப்பாளர்: பேராசிரியர் எம்.
ஏ. நுஹ்மான் அவர்கள்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துமுறை பிறந்தாலும்!

**கவிஞர்**
**பாண்டியூரன்.**

பாட்டெழுதும் ஆசையெனக் கில்லையன்பே
பாவலனு யாதற்கும் படிக்கவில்லை
மீட்டலெதோ நிகழ்கிறதிப் பிறவியில் நான்
வினைகெட்ட வேலையெதும் விழைந்தே னில்லை
ஒட்டையிசைத் தட்டைப்போல் ஓரிடத்தின்
ஒலியினையே மீட்டுவதா யுளரு மல் நீள்
காட்டுமலர் பூப்பதுபோற் கவிதையுள்ளம்
கனல்கிறதால் இப்பணியோர் கடமையன்பே

உன்னுடனே யுறவாடி ஒன்றுசேர
உலகத்திற் பிறந்தேனே யன்றி யெந்த
நன்மையுமே கருதியுனை நாடவில்லை
நம் சேர்க்கை இன்பத்தின் நாதவீணை !
பின்னேர மாயரும்பும் பெரிய நோயில்
பிள்ளைகளைப் பெறுவோமென் றெண்ணினுமோ?
பொன்மேனி பூமுத்தைப் புணரும்போது
பொழுதேனே புலர்ந்ததெனப் பொருமினேமே!



முத்துகளைப் பிறப்பித்தற் கென்றே ஆழி
மூண்டதடி யுலகத்தில் முழங்கால் மட்டில்
கத்துகடற் கரையெங்கும் முத்துப் பூத்தால்
கவனிப்பா ரற்றகிளிஞ்சல் ஆகாதோ?
பத்துமுறை பிறந்தாலும் பவளம் போன்ற
பயனுள்ள நெருப்பாகும் பாக்யம் பெற்றேன்!
முத்தமிடும் வேளையிலும் முயங்கும் போதும்
மூள்கிற தீ யேறுகிற திரியானே னே.

என்னொளியால் உன்னிதயம் புண்ணாகாமல்
எரிந்தாலே போதுமடி, அன்பருக்கும்
என்னுலே இடரொன்றும் ஏற்படாமல்
இன்ப மழை பெய்தாலே யெழும் பசுமை.
மன்னாதி மன்னரென வாழ்த்த வேண்டாம்
மண்குடிசை வாசியுளம் மகிழ்ந்தாற் போதும்
பொன்னரசி பேழையில் நீ வார்க்கும் தேனைப்
புசித்தன்பர் இதயத்தும் பூட்டி வைப்பேன்.

இன்னுமென சொல்லுவதற் கிருக்கு தன்பே
இன்றென்னைப் புரிந்தாயோ? ஏற்றமென்னும்
நன்னயப்பே ராசையினால் நடிகனென்று
நானேயென் நெற்றியிலே நாமஞ்சூட்டேன்.
முன்னரெதும் பட்டறையில் விதையிருந்தால்
மூண்டெழுமென் பணியாலே முளை யெறிந்து
உன்வயிற்றுப் பசிதீர்க்கும் உழவனாகி
உயிர்போலக் காத்திடுவேன் உறுதியன்பே!

●●●

நன்றி:

**'கவிஞன்'**
காலாண்டுக் கவிதை
இதழ் 1.
(மார்ச் 1969.)


(தொகுப்பாளர்:
பேராசிரியர்
எம். ஏ. நுஹ்மான்
அவர்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...12ம் பக்கம்.

# படைப்பு.



என்னோடு இணைந்தென்றும்
இசைமீட்டும் பெண்ணே!
இங்கேவா இன்றுநாம்
புதிய இசை மீட்போம்!
உன்னோடு சேர்ந்துநான் உரைத்தந்தப் பாடல்
உழைக்கின்ற தோழர்களின்
நரம்புகளில் சற்றும்
இன்னும்தான் ஓசையினை எழுப்பவில்லை யென்று
என்னிடத்தில் சொன்னதனால் இதயம்மிக
நொந்தேன்.
உன்னாலே இனிப்பாட
இயலாதா போ! போ!
ஒருபோதும் நான்பாட துயில்கொள்ள மாட்டேன்.


நித்திரைக்கு வந்துநான் துயின்றுலும் கண்ணே!
நினைவுகளில் வந்தந்தத் துயருகளே பாடும்.
இத்தரையில் நொந்தழிவோர் எழுச்சிபெற ஏதும்
இறவாத கவிதைகளைப் படைப்பதற்கு நானும்
செத்துக் கொண்டிருப்பதனை அறியாயா கண்ணே!
சீக்கிரமாய் கோப்பியினை கொண்டுவா முன்னே
சத்தான ஒருபாடல் செய்து நாம் பின்னே
சந்தோஷமாய் இன்று துயில் கொள்வோம்!
கண்ணே!

●●●

**கவிஞர் அன்பு முஹைதீன்.**

நன்றி: **'மல்லிகை'** இதழ் 100.
12வது ஆண்டு மலர். - ஆகஸ்ட் 1976.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரசவம்

அசுகவி
அன்புடீன்.

நன்றி:
கவிஞர் அன்புடீன் அவர்களின்
**'சாமரையில் மொழி கலந்து'**
கவிதைத் தொகுப்பிலிருந்து.
வெளியீடு: பாலம் கலை
இலக்கியப் பேரவை,
அக்கரைப்பற்று. ஜனவரி 2002.

நாங்கள் 'மலடு'கள் அல்ல
அதனால்தான்
அவரசப்படுகின்றோம்
பிரசவம் ஒன்றை நிகழ்த்துவதற்கு.

நாள் பார்த்து
தேதி பார்த்து
நிச்சயதார்த்தம்
நடத்திய பின்னரே நடைபெறும்
எங்களது திருமணங்களும்.

எண்ணி இருக்கின்றோம்
பிரசவம் காண
நிறை மாதக் கற்பிணிகளாய்
உருவெடுத்து.

சும்மா இருக்க மாட்டார்கள்
எங்களது வைத்தியர்கள்
நோக்காடு ஏற்பட்டும்
பிரசவம் நிகழத் தடையாயின்.

ஏனெனில்
படித்து இருக்கிறார்கள் அவர்கள்
செய்வதற்கு "ஆப்ரேசன்"

நோய் நொடி யற்றதும்
சுகமானதுமான
'சிசு' வொன்றை பிரசவம் செய்ய
எந்தப் பெண்ணும் அஞ்சுவதுண்டோ
சிந்துவதற்கு இரத்தம்?

*(1975. 10. 04)*

●●●

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளும் காணிக்கையும்

**- ஜலால்டீன் மஹாகவி.**

கிழிந்த செருப்புடன் செல்லும்
பாடசாலை மகளுக்கு
புதுசு வாங்கித் தருவதாக
வாக்குக் கொடுத்துவிட்டு
நிமிர்ந்தவள்
படித்துவிட்டு வேலை வெட்டி
இல்லாமல் காலம் கடத்திக்
கொண்டிருக்கும் மகனுக்கு
வேலை கிடைக்க வேண்டி
பிரார்த்தனைக்காக
அடுத்த ஊர்க் கோயிலுக்கு
நேர்த்திக்கடன்
கொடுக்கவெண்ணி
மீதமாயிருந்த வெள்ளிக்காசை
கொசுவத்தில் வைத்து முடிச்சுப்
போட்டுக்கொண்டு
வீட்டு முன் வீதிக்கு வந்தவள்
வந்த மீன் காரனிடம் வாங்கிய
மீனை திருப்பிக் கொடுக்கிறாள்
இருந்த தாள் காசுடன்
வெள்ளிக்காசையும் சேர்த்துக்
கொடுக்க
இடங்கொடுக்காமல் மனசு இறுக
காணிக்கையில் கைவைத்தால்
கடவுள் தண்டிப்பார் என்று
எண்ணுகிறாள்
இடைக்கிடை
இளம் வயதிலேயே இருதய
நோயால்
இறையடி சேர்ந்த
தன் கணவனின் வருசத்தன்று
ஏதாவது வாங்கி
ஏழைகள் இருவருக்கு
பசியாறக் கொடுக்க
வேண்டுமென்றும் எண்ணுகிறாள்

பகலும் இரவும்
பழஞ்சோற்றை தண்ணீரில் போட்டு
உப்போடு சேர்த்து
ஒரு நாளையே உருட்டி
விடுகிறாள்

மறு நாள் காலை
புதுச் செருப்பை ஞாபகப்படுத்த
பாடசாலை மகள்
பக்கத்தில் வந்து
முனகி முனகிப் பார்க்கிறாள்
அம்மா உடுத்த அதே சாரியுடனும்
அதில் முடிந்த காணிக்கையுடனும்
மீளாத்துயிலில் கிடக்க
அம்மாவின்
கண்கள் மட்டும்
கனவுகளுடன் மூடாமல்
திறந்திருந்தன!

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக் காலம்

பள்ளி சென்றோம்
பாலக வயதினிலே
பாடங்கள் பயின்றோம்
பாலர் வகுப்பினிலே

காலங்கள்
கடந்து
கல்வியின்
வகுப்புகளும் உயர்ந்தது

உண்ணும்
உணவுகளும்
உரசிவிட்ட இருப்பிடமும்
உள்ளத்தில் இருக்கிறது
மறக்கத்தான் முடியவில்லை
பள்ளியின் கதிரையின் கீழ்
பாடப்புத்தகங்களை
பதுக்கிவிட்டு
பக்கத்து ஈச்சம் காட்டுக்குள்

ஈச்சங்காய் பறிக்கையிலே
இடுக்கு முள்ளு
இடுப்பில் குத்த
இருந்து உண்ட நாட்கள் அன்று

கடலாஞ்சிப் பழம் பறிக்கையிலே
கட்டெறும்பு கையில் குத்த
கதறி அழுதோம்
கட்டெறும்பு குத்துதென்று

பக்குவமில்லா
பள்ளித்தோழர்கள்
பாசாங்காய் கேலி செய்து

- கவிஞர்
சுலைமாலெவ்வை
சின்னத்தம்பி.

பழகிய நாட்களின் இனிமைகள்
எத்தனையோ
ஆசானை மதித்தோம்
அன்பாக நடந்தோம்
அடிப்பது போல் நடிப்பார்கள்
அடிகள் உறைப்பதில்லை

பள்ளி கலையும் முன்
படி தாண்டி சுவர்
பாய்வோம்
பறந்து செல்ல வீட்டிற்கு

கணக்குப்படிக்க
கைவிரல்போல்மரக்குச்சி கொண்டு
கற்ற பாடத்தை இன்று
கணிப்பான் பார்குறது

அன்று உயர் வகுப்பு படித்தவர்கள்
அரச தொழிலின்றி அலைந்தார்கள்
அவர்களைப்போல் நாமும்
அலைவோம் என்று

அறை குறை படிப்புடன்
அன்று பிரிந்து வந்தோம்
பள்ளியை விட்டு
அறை குறையானாலும்
அழுத்தமான கல்வி அது
அன்புள்ள
ஆசான்களை மதிக்கின்றோம்
அவர்களைக் கண்டால்
அன்பு ஸலாம் சொல்கின்றோம்

நாகரிகமாக
நடந்தோம்
நாட்டியங்கள் கூத்து
நாங்கள் அன்று செய்யவில்லை......

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிவாகை சூடு

- கவிதாயினி
டாக்டர். ஜலீலா முஸம்மில், ஏறாவூர்.

பெண்ணே, பெதும்பையே
பேரழகின் பெட்டகமே
பொறுமையின் சின்னமே
போதுமடி உந்தன் சிறுமையே.

போராடினால் வேரோடு
கிள்ளி எறியலாம்
பெண்ணடிமைத் தனமெனும்
மடமை தனை.

போதனைகள் கொண்டு
சோதனைகள் வென்று
பொங்கியெழு பதுமையே
புதுமை செய்ய.

திங்களென ஒளிர்ந்திடு,
தீர்க்கமாய் முடிவெடு
மங்கல வாழ்த்துமுழங்கிடவே
மாதவம் செய்திடு.

சிறகடிக்கும் சிட்டுக்குருவி நீயடி
சிந்தனையை அவிழ்த்திடு
விண்ணில் பற, எல்லை தொட
மண்ணில் சாகசங்கள் மழையெனவிழ

சிங்கப்பெண் நீயடி
சிகரம் தொட்டிடு
சங்கத் தமிழெனவே
தரணியில் திகழ்ந்திடு

கலைத்துப் போட்டாலும்
காந்தமாய் ஒன்றுசேர்
சிதறி விழுந்தாலும்
விதையாய் விழு, மரமாய் எழு.

பாதைகள் கரடுமுரடு ஆயினும்
உன் பாதங்கள் பலமாய் எட்டு
வைக்கட்டும்
இன்னல் கண்டு கலங்காதே
இடையூறு வரும் ஒதுங்காதே.

கல்வி கொண்டொரு கலகம் செய்
காசினியில் காலத்தை வெற்றிகொள்
நல்லதே நடக்கும் நம்பிக்கை கொள்
நாளை என்பது நமக்கே
உறுதிகொள்.

தடுப்புகள் எல்லாம் துடுப்புகளே
தடைகள் யாவும் உடைக்கப்
பிறந்தவளே
துரும்பும் உதவும் உணர்ந்திடு
துருவம் தாண்டிப் புறப்படு.

எள்ளி நகையாடும்
எளியோர் விரண்டோட
வீறுநடை போடு,
வெற்றி வாகை சூடு.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிய கனவே

துண்டு மேகம்
இலக்கற்று அலைகிறது
தலைசாய்க்க இடமில்லை
கையாலாகாதத் தனத்துடன் கண்ணீர் வடிக்கிறோம்
இதிகாசகாலத்திலும்... இப்போதும்...
இனியும் எத்தனை நாள் தொடரும் உங்கள் பயம்?
ஒரு சின்ன பட்டாம்பூச்சி
ஆயிரம் மலர்க் கனவுகள்
தீயிலிட்டு வேடிக்கை பார்க்கிறது அதிகாரப்பிசாசு
போட்டிகளை வேடிக்கை பார்க்கிறேன்
பலர் அழுகின்றனர் சிலர் பரிசு பெறுகின்றனர்
வீட்டுக்குத் திரும்புகிறேன்
சப்தமிடும் சருகுகள்
சலனமற்ற மரம்
தவளைக்கூச்சல்
யாத்ரீகனை பின் தொடராதீர்கள்
அவன் போக்கிலே விட்டுவிடுங்கள்
அவனாவது சந்தோஷமாய் இருக்கட்டும்
வெண்பனிக்குள் உன்னைப் பார்த்தேன்
வண்ண மேகமாய் உலாவினாய்
அருகில் வருவதற்குள் கண்விட்டு மறைந்தாய்
அழகான கனவாய் வந்தாய்
விடிகாலையில் எங்கு போனாய்?
இரவுவந்தால் ஓடி வருகிறாய்
கருகிவிட்டாய்
கண்ணீர் சிந்தமாட்டோம்
காரணிகளை வேரறுப்போம் வேரறுப்போம்
நல்லதோர் வீணை
புழுதியில் எறிந்து விட்டார்கள்
நலங்கெடுத்தவர்களை இன்னும் சகிப்பீர்களோ?

●●●

- கவிஞர் வசந்த தீபன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை வாசிக்கும் புத்தகம்

கவிஞர் மருதமுனை விஜிலி.

விரிந்த புத்தகத்திலிருந்து
புறப்படுகின்றது
நமதான சுயசரிதை

வாசிக்கப்படாத புத்தகங்களும்
சில கணங்களில்
விருட்சங்களாய் அகல விரிகின்றன
கிழிந்த புத்தகங்களுக்குள்ளும்
பல தருணங்களில்
அநீதங்கள் துயர்கொள்கின்றன

புரியப்படாத புத்தகங்களும்
புரட்டப்படாமல்
புழுதியாய் எங்கும் இருள்

புத்தகங்கள் ஒருபோதும்
காலாவதியாவதில்லை
காடு - கடல் மனிதம் - காதல்
என்றும் உயர்ந்த பக்கங்களே

மனிதர்களைத் தாளம் தப்பியபடி
வாசித்துக் கொண்டிருக்கின்றன
சில எழுத்துக்கள்

வாசிக்காமலே புறப்பட்டு
கடந்து கொண்டிருக்கின்றன
இடையில் வழிமறிக்கும் பக்கங்கள்

மூடிய புத்தகத்தினுள்
மனிதன் நிரம்பியபடி புன்னகைக்கின்றான்
இதயங்களைக் கழற்றி விட்டு

ஆனாலும்
இன்னும் திறக்கப்படாமலே
மூடியபடி புதைந்து கிடக்கிறது
சில இரவல் புத்தகங்கள்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தால் ஏற்றம் தருவாய்

எழுதிட நீயும் வைக்கின்றாய்
எந்தனிறையே பேரிறையே
பழுதுயில்லா திப்பணியைப்
பண்போர் புரிந்திய யருள்வாய் நீ

பலதும் பத்தும் பகட்டுக்காய்
பண்பு கெட்டெழுதாது
நலவாய் சமுகம் சிந்தைபெற
நிறைவாய் கருத்தருள்வாயே

புத்தியுள்ளெம் சமூகத்தோர்
புன்மைசெய்து வாழ்கின்ற
சித்தியடையா நிகழ்வுகளை
சீர்திருத்தியெழுத விடு

புகழில் பணத்தில் மேயாது
பகட்டில் தீதையெழுதாது
அகத்தில் நீதி நேர்மையிலே
அறிவாயெழுத வுதவிடுவாய்

பட்டம் பதவி விருதுக்காய்
பாதை தவறிச் சென்றுவிடா
எட்டநிற்போர் திருந்திவிட
என்னை எழுத வைப்பாயே

எழுதுகோலைத் தந்தவன் நீ
எழுத்தால் சமுகப் பணிசெய்ய
பழுதிலாதெனை நெறிப்படுத்தி
படைப்பால் நன்மையளித்திடுவாய்

ஆற்றல் அறிவை விரிவாக்கி
அன்பாயென்னைப் பண்படுத்தி
போற்றச்செய்த வுனக்கன்றோ
புகழும் பெருமையு மெனக்கல்ல

இம்மை வாழ்விலிதன் மூலம்
ஏற்றம் தந்தாய் மறுமையிலும்
எந்தன் பாவந்தனைப் போக்கி
ஏற்றந்தருவாய் என்னிறையே!

•••

**- கவிஞர் ஜமால்தீன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகச் செழுமை அவனியில் ஓங்க வேண்டும்.

ஆன்மீக வரட்சியினால் அவனியெங்கும் புன்மைகள்
அனாச்சாரம் அவலங்கள் மேலோங்கி வருகின்றன.
மான்மியங்கள் மேதினியில் விருட்சமாகி நிழல்தந்தால்
மானிட வாழ்க்கையெல்லாம் மாணிக்கக் குவியலாகும்.

பத்திரிகை, தொலைக்காட்சி வெளிப்படுத்தும் காட்சிகளில்
பெண்குலத்தை அலங் கோலமாகக் காட்டுகின்றார்
நித்திலப் பெண்களான தாய்க்குலத்தை இழிவாக்கி
நிந்தனைகள் செய்கின்றார். பாவங்களில் குளிக்கின்றார்.

ஆவல்மிகுந்த மனதோடு அழகுராணிப் போட்டிகளை
ஆண்குலத்தார் அரங்கேற்றி குரங்காட்ட மாடுகின்றார்.
ஔவையாரை, அருமைத் தாய்மாரைப் புறக்கணித்து
ஔவியம் வளர்வதற்கு பச்சைக்கொடி காட்டுகின்றார்.

பருவப் பெண்களின் மார்பகம், தொப்புள், தொடையனைத்தும்
பொருள்வளம் சேர்ப்பதற்குக் காட்சிப் பொருளாவதனால்
அருளாளன் இறையோனின் மாட்சிதான் கிடைத்திடுமா?
ஆன்மீக வரட்சிதான் நீடித்து நிலைபெறுமே!

அன்னை திரேசா மற்றும் தங்கம்மா அப்பாக்குட்டி
அறநெறிப் பண்புகளைப் பரப்பிடவே பாடுபட்டார்.
புண்ணுக்கு மருந்திட்டுக் குணமாக்கும் சேவைதனைப்
புண்ணியமாய் எண்ணித்தான் வாழ்நாளைப் போற்றினரே!

பரிசுத்த அல்-குர்ஆன், இறைதூதர் முஹம்மதுவும்
பரிசுத்த கிறிஸ்தவத்தின் பைபிள் விளம்பியதும்
அருமையான இந்துமதம், பகவத்கீதை புகன்றதுவும்
அமிர்தமான பௌத்தம் சொன்னதுவும் பேரின்பச்சுனையல்லவா!

இறையச்சம், விருந்தோம்பல், இரக்கம், கருணை
இவ்வுலக வாழ்வுதனில் நீடித்து நிலை பெற்றால்
குறையில்லா வாழ்வும் குதூகலமும் சுரந்திடுமே!
கறைபடிந்த நெஞ்சமெல்லாம் கலங்கித்தான் போய்விடுமே!

பிரபஞ்சப் பெரும்பரப்பில் ஆன்மீகப் பெருவிருட்சம்
பிரகாசம் பெற்றுவிட்டால் அனைத்து மாயைகளும்
செல்லாக் காசாகிடுமே! நிம்மதியும் சுரந்திடுமே!
பொல்லாத எண்ணங்களை விட்டொழித்து உயர்வோமே!

•••

**கலாபூஷணம் ஏ. எம். பாறூக்**
**(கவிஞர் புன்னகை வேந்தன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டயாடி சங்கதிய...

கேஸு வெடிக்கிதெண்டு
கிறுகிப் படுத்த நானும்
கரண்டடுப்பு வாங்கினன்ரீ - அந்தக்
கடல்ல இப்ப மண்போட்டான்

லாம்புக்குத் திரியுமில்ல
லாம்பெண்ண கடும வெல
கோதாரி வந்து - நம்மள
கொல்லுறதப் பாருபுள்ள

சந்தைக்கிப் போனேன்ரி
சாளையாலும் வாங்கவெண்டு
வெலய நான் கேட்டு - புள்ள
வெலவெலத்துப் போனேங்கா

கெணறொண்டு தாளமெண்டு
கேப்பமாடு சென்னதாங்கா
பட்டையில்லா வாளி - இது
பதறுறதப் பாருகிளி

பறன் மொகப்பில் நிண்டு
பக்கிளொண்டு கத்தினதாம்
செவிட்டலியனும் கேட்டு - நல்லாச்
சிரிச்சதாண்டி மெய்தானா

கொரங்கு ஒண்டு வந்து
குந்தினதாம் சோலையில
எச்சி வழிஞ்சதுக்கு - விம்மி
எடரினதாம் மெய்தானா

அன்ன நட நடக்க
ஆசையில காகமொண்டு
தன் நடையத் தான்மறந்து - நிண்டு
தவிச்சத நீ கண்டயாகா

பட்டழிஞ்சி தோத்த வெள்ளப்
பண்டியொண்டு வந்து நிண்டு
கெட்டழிஞ்ச சேதி - நொக்குக்
கெடச்சதாடி செல்லுபுள்ள

அட்டக் கறுப்பு அவ
அங்கமெலாம் மசமசப்பு
எட்டாப் பெரும் நெனப்பு - இது
எணங்குமாகா செல்லு புள்ள

ஈருகொல்லி போட்டு
இருட்டுலெல்லாம் பேனெடுத்து
என்ன செய்யப் போறம் - நீயும்
இருடிபுள்ள நான் போறன்.

•••

- எழுகவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானம்

தெருவின் ஓரங்கள் இன்று
வெறிச்சோடிக் கிடக்கின்றன
கொல்லும் கொரோனா வைரஸில்
லொக்டவ்ண் நீக்கிய பின்பும்

திறந்த வெளி யெங்கும்
சோகங்களின் கீதம்
ஒலித்துக் கொண்டிருக்கிறது
ஆகாத கொரோனாவால்
ஆடிப் போய்விட்டது
அனைத்து மென்று

வான் பரப்பெங்கும்
மயான களை கட்டுகிறது
கருக்கட்டிய கருமுகில்கள்
கனமழை பெய்யவில்லையென்று

பெரு வெளி யெங்கும்
மயான வாடை வீசுகிறது
மனித ரெல்லாம் பஞ்சத்தில்
பதறித் துடிக்கிறார்களென்று

மானிடர் இன்று
செத்துப் பிழைக்கிறார்கள்
கொரோனா தூவிய
கொடுந் தீயில்
சகலதும் கருகிச்
சாம்பலாகிப் போனதென்று

எத்தனை பொய்களையும்
எத்தனை சாட்டுக்களையும்
எத்தனை நிஜங்களையும்
கொட்டிக் குவித்தாலும்
தொலை தூரம் போய்விட்ட
வாழ்வின் தாக்கத்திற்கு
எதையும் ஈடுகட்ட முடியலையே

இந்த அபாயத்தில் இருந்து
எம்மை எல்லாம் காப்பாற்ற
அந்த அல்லாஹ்
எமக்கெப்போதும்
அருள் புரிவானென
ஏங்கியே தவிக்கிறது மனது

மாற்றம் நிகழும் உலகில்
மனிதன் மாறாத வரை
மாற்றம் என்ற ஒன்று
இவ்வுலகில் நிகழவே நிகழாது
இதை நாம்
யாரிடம் சொல்லியழ?

•••

**கவிதாயினி எம். ஏ. மாஹிறா (கலீறா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதாயினி -

# வீழ்வேனென நினைத்தாயோ

வானம்பாடி முஜா,
நிந்தவூர்.

ஒரு கண்ணாடி தேசத்தின்
கடைசி விம்பங்களையும்
காணமலாக்கும்
கொடூர தந்தமேந்திய

அயல் நாட்டு
அரக்கியோடு தான்
அவ்யுத்தம்
அத்தனைமுறை
அவள் முயன்று முறைத்தும்

அடங்காத பளீர் முகத்தோடு
அவளது எதிர்தேசமாக ஜொலித்து
மகிழ்ந்திருப்பது கண்டு,
அழுக்குகளை
அள்ளி அள்ளி அறையலானாள்

பரிதாபம்....
அப்போதும்,
அதன் மெய்விம்பங்களை
சற்றும் கலங்கவைக்க
முடியவில்லை அவளால்
என்றும்போல்
முகம் மற்றும்
குரல் அற்றவர்களின்
இனியகுரலாய் அது
ஓங்கி ஒலிப்பது கண்டு

அந்த
அகங்காரப் பார்வை கொண்டவள்,
சற்றுக் கடினமாகத் தாக்கி
கதறவைக்கவேண்டுமென
எண்ணியவாறே

தன் தந்தத்தின்
ஆரவாரத்தோடு தொடராக
மோதித்தள்ள
அந்த நுட்பக் கூட்டில்
மென்வலி தான் என்றாலும்..

சிதறும் சிறு துளி கூட
சுதந்திர மண்ணை துதிசெய்தபடி,
வலிமை மிகைத்தெழ,

ஆயிரம் மடங்கு விம்பங்களை
பிரசவித்தபடி
புன்னகை முழக்கமிட்டது
இறுதி வெற்றியும் எனக்கேயென்று.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை...

காணாமல் போன ஆண்டுகள்
தாயகம் நோக்கிய ஒரு பயணம்
நாட்டுக்கு வாடா
என்ற நண்பனும்
வந்து போங்கள்
என்ற மனைவியும்
வந்தால் போகவேகூடாது
என்ற
கடைக்குட்டியும்
பார்க்க ஆசையாக இருக்கிறது
என்ற தாயும்
என்ன செய்வது
எப்படி செய்வது
முடிவே இல்லாமல்
முடிவும் இல்லாமல்
ஆகாயத்தில் நான்

உடைப்பெடுத்த
அணைக்கட்டு
நாளை
தலைப்பு செய்தியாகும்
அள்ளுண்டு போன
நிலபுலன்கள் அறிக்கைகளுடன்
கொட்டை எழுத்தில்
முதல் பக்கத்தை அலங்கரிக்கும்
நிவாரணங்களுக்கு கால்
முளைக்கும்
நான் மட்டும் ஒரு ஓரமாய்
வெளிநாட்டு உழைப்பாளி
ஆறுதல் வார்த்தைகள்
எனது நிவாரணங்கள்
மீண்டும் தாயகத்தைவிட்டு
விடைபெறும் நாட்களை
எண்ணிக்கொண்டிருக்கிறேன்
சட்டத்தில் கண்டுகொண்ட
ஓட்டைகள்
குற்றவாளி ஓர்
பிரதமஅதிதி
நாளை...

●●●

**- கவிஞர் எம் சீ யே பரித்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்தவற்றில் பிடித்தவை.

# அப்பாவின் சாய்வு நாற்காலி

கவிஞர்
தீபச் செல்வன்,
தமிழ் நாடு, இந்தியா.

ஏதோவொரு நிர்பந்தத்தில்
அத்தைமகள் அம்மாவை
கட்டிய அப்பா,
கோபத்திலெல்லாம்
அம்மாமேல் தொடுக்கும்
வழக்கமான வார்த்தையாய்,
"தற்குறி தற்குறி
படிக்காத தற்குறி",

துளியும்,
கோபமோ சுரனையோ
இல்லாமல்,
சமயலறைக்குள்
அடைந்துகொண்டு,
உடைந்து அழுகிற
அம்மாவின் முகத்தைதான்,
சின்னவயதில்
அதிகமாய் படித்த ஞாபகம்,

அதனால்தான்,
என் முதல் கவிதைப்புத்தகத்தில்,
படிக்கத்தெரியாத
அம்மாவை,
பத்தாம் பக்கத்தில்
எழுதி வைத்தேன்,

சாகித்ய அகாதமி
விருந்து வாங்கிய
அப்பாவை
ஒரு வரிகூட எழுதாமல்
மறுதலித்தேன்.

இன்று,
அம்மா இறந்து
ஆறு ஆண்டுகள் கழித்து,
ஏதோவொரு மனநிலையில்,
எனது முதல் புத்தகத்தை,
என் மேசையிலிருந்து
தேடியெடுத்து,
படிக்கிறார் அப்பா.

பத்தாம் பக்கத்தை
படித்த பின்னே,

தனக்காகவொரு
பக்கமிருக்குமா என்று,
மீண்டும் மீண்டும் புரட்டி
முதலிலிருந்து மீண்டும் தேடி,
கடைசியாய் களைத்துப்போய்,

கண்ணீர்த்துளியோடு,
சுவற்றில் தொங்கும்
அம்மாவின் புகைப்படத்தை
பார்த்துக்கொண்டே
மூடி வைக்கும்
அப்பாவின்,
சாய்வு நாற்காலி
ஆடும் சப்தம்,

இந்த மழையிரவெல்லாம்
என்னுயிரை
உறுத்திக்கொண்டே இருக்கிறது.
என்றுமில்லாமல்,
இன்றுமட்டும்
விடிய விடிய
கேட்டுக்கொண்டே இருக்கிறது
நாற்காலி ஆடும் சப்தம்.

இனியும் பொறுக்க
முடியாமல்,
தலையணையை காதில்
அழுத்தியமர்த்தி
உறங்கி விட்டேன்.

மறுநாள்,
அதிகாலை
ஐந்து மணிக்கு
எழுந்து பார்க்கிறேன்.

அசைவின்றி கிடக்கும்
சாய்வு நாற்காலியில்,
அப்பாவின் வலது கை
கீழே தொங்க,
இடது கை பிடிமானத்தில்,
சிக்கிக்கொண்டு
திறந்திருக்கிறது,

எனது புத்தகத்தின்
பக்கம் எண் பத்து.

அதில் இரண்டாம் பத்தியில்,
அன்னபூரணி என்ற
அம்மாவின் பெயர் மட்டும்
மங்கலாய்,
அச்சு பிசுபிசுத்து
அழிந்திருக்கிறது
அப்பாவின் கண்ணீர் பட்டு...

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சருகாய்

கடல் அலை நுரை செறிவில்
அமிழும் அமைதியின் ஐதான இசையின்
அடி மனதில் பதுங்கிப் பாட்டிசைக்கும்
ராகங்களின் ரகசியம்
ரிதம் மாறாமல்
உன் பாதம் நனைத்திடும் வேளையிலும்..,

மழலை மணத்துடன்
ஆடி அசைந்திறங்கும்
அந்த சருகான இலையில்
சொருகப்பட்டிருக்கும்
உன் உறவின் இறுக்கத்தை
உணர்கின்ற கணங்களிலும்..,

அன்பின் வியாபிப்பால்
அத்தனை பக்குவமாய்
கைகளில் ஏந்தி
இறக்கிடும் உன் அரவணைப்பில்
நானும் பதிங்கிட முனைகிறேன்

சருகான இலையின் சரசரப்புக்குள்
அல்லது
புறக்கணிக்கப்படும் கடல் நுரையின்
கனமில்லாக்கானத்தின் கடைசி வரியொன்றில்.!

- கவிஞர் பரீட்சன்.

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளுடன்

# விளையாடுகிறது

## மனசு

யாருமே இல்லாத இடத்தில்
இருளை மட்டும் துணையாக
விட்டுச் செல்கிறது
இன்னொரு இருளின் தனிமை...

நடைபாதைகளின் நீளத்தில்
சிறு விரிசல்கள் மனதை
சலனப்படுத்த..
சிறு நடுக்கலில் அந்த
சாலையில் ஒரு நாய்....

யார் செய்த செய்வினையோ
முனங்கி கிடக்கும்
பிச்சைக்காரனுக்கு
ஓயாது இருள் கொடுக்கிறது
இரவும், மரமும் - இது
வரமா - சாபமா....

பெருவெளிகளில்
நீந்திக் குளித்தவனுக்கு
தூரத்து மின்மினி சூரியனோ,
நட்சத்திரமோ....

தலைக்கு மேல் குவியும்
வெளிச்சத்தை மறைத்து
கண்மணிக்கு இருளின்
கதகதப்பைத் தருகிறது
இன்றோ நாளையோ உதிரும்
இலை..

கண்ணைப் பொத்திக் கொண்டு
மனதோடு விளையாடும்
கண் தெரியாத குழந்தையுடன்
துணையாக
இருளுடன் தனிமையும் சேர்ந்து
விளையாடுகிறது..
தட்டுத்தடுமாறி குதுகளிக்கிறது
மனசு.....

**கவிஞர்**
**கார்கவி,**
தமிழ்நாடு, இந்தியா.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ... பேராசை ...

**- கவிதாயினி பாத்திமா ஸூபா -**

பறவை என்றால்
பறக்க வேண்டும்.

மலையுச்சியின் முகட்டில்
நின்று கொண்டு
உலகை ரசிக்க வேண்டும்.

அந்த மேகக் கூட்டத்தை
கிழித்துக் கொண்டு
வான் நீல நிறத்துடன்
கலக்க வேண்டும்.

பறத்தலிலும்
ரசித்தலிலும்
அத்தனை
இன்பமிருக்கிறது.

இயற்கை
அவ்வளவு
அழகானது.

நந்தவனமொன்றை
சுமந்து செல்லும்
பறவையின் விரலிடுக்கில்
ஓர்விதையாயாவது
ஒட்டிக் கொள்ள வேண்டும்.
எத்தனை ஆசைகள்...
எத்தனை ஆசைகள்...

அத்தனை ஆசைகளும்
பெட்டிப் பாம்பாய்
அடங்கிக் கிடக்க
அடைகாக்குமொரு
பெட்டைக் கோழியாய்
இறக்கைகள் வலிக்கிறது.
பாவ மூட்டைகளைச்
சுமந்து கொண்டு
இன்னும் எத்தனை
காலங்களுக்குத் தான்
வலி முட்டைகளை
அடைகாப்பது?
இவ்வுலக வாழ்க்கை
ஏன் இத்தனை
நீண்டதாக இருக்கிறது?

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சு மிட்டாய் விற்பவன்

மிட்டாய் விற்பதற்கு முன்னராக
குழந்தைகள் அழும் வீடுகளையும்
நடமாடும் தெருக்களையும்
தேடித் தேடி அறிந்து கொள்கிறான்
பின்னர் அவர்களின்
நிழல் விழும் இடங்களை
கடக்கும்போது மட்டும்
உரத்த குரலில் கூறிச் செல்கிறான்
மிட்டாய்களை அழுது அடம்பிடித்து
வாங்கிச் சுவைக்கும்
குழந்தைகளால்தான் சிரிக்கிறது
அவனது தினசரி வாழ்வு
பஞ்சு மிட்டாய் விற்பவனுக்கு
குழந்தைகளின் வீடுகளை தவிர
அனேகமாக வேறெதுவுமே
ஞாபகங்களில் இருப்பதில்லை.

**- கவிஞர் ஜமீல்.**

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணறை

உண்மைகள் உறங்குமிடம்
உள்ளாரும் இல்லாரும்
உட்குழியில் இறங்குமிடம்
உள்ளெலும்பும் இறக்குமிடம்.

வெள்ளையாய் ஆடைகட்டி
வெளியேற முடியாவிடம்
விழிமூடி பாடைகட்டி
வேறெவரும் வாராவிடம்.

நிம்மதியைத் தேடித்தேடி
நித்திரையை இழந்தவரும்
நிம்மதியாய் தூங்குமிடம்
நீண்டநாள் வாழுமிடம்.

சாதி, மத பேதமின்றி
சகலரும் ஒன்றாய் கூடி
நீதி நிலை நாட்டுமிடம்
நிலையாமை காட்டுமிடம்.

ஆதிதொட்டு அந்தம்வரை
அனைவரும் ஆறடியில்
நாதியற்று ஏங்குமிடம்
நன்மை, தீமை தாங்குமிடம்.

அதற்குள் எத்தனை
சண்டையடா
மோதலில் உடையிது
மண்டையடா.

●●●

கவிஞர்
ஏரூர் கே. நௌஷாத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம்

ஒன்றாய் அமர்ந்து
தேநீர் அருந்திய
ஞாபகங்கள்
நெடுங்காலத்திற்குப் பிறகும்
விரிசல் விழுந்த திண்ணையில்
அப்படியே அமர்ந்திருக்கின்றன.

தாழ்வாரத்தில்
அதே புன்னகையோடு
தண்ணீர் தொட்டியை எட்டிப்
பார்க்கிறது
வெள்ளை நிலவு.

கூடத்தின் ஓரத்தில்
விளையாடிய ஆட்டுக்கல் உரலை
பெயர்த்தெடுக்காமல்
விட்டு வைத்திருக்கிறார்கள்.

சரிந்திருந்த ஓடுகளின் வழியே
குதூகலத்தில் நனைத்த
அதே மழை நீர்
கசிந்து கொண்டிருக்கிறது.

சமையலறை புகைக்கூண்டில்
ஒட்டடையின் பின்னல்கள்
அப்போது போலவே
இழையோடுகின்றன.

முன்கட்டு நடை முதல்
ரேழி தோட்டம் வரை
எதுவும் மாறாத
பாழடைந்த வீட்டில்
மொத்தமாய் மாறி இருக்கிறாள்
சிறு வயது சிநேகிதி...

" நீ " என்பதற்கு பதிலாக
என்னை அடிக்கடி

" நீங்கள் " என
குறிப்பிட்டுப் பேசும்போது.

கவிதாயினி
தி. கலையரசி,
தமிழ் நாடு, இந்தியா.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னத்தில் பலூன்!

கன்னம் இரண்டிலும்
காற்றை நிரப்பிட,
சின்ன குழந்தையின்
சிறுகரம் குத்திட,
புன்னைக் காய்போல்
புலர்ந்திடும் வெடிப்பு,
அன்னை முகத்தில்
ஆயிரம் சிரிப்பு.

மழலையின் முகத்தில்
மலர்ந்திடும் புன்னகை,
பிழையேதும் இல்லாத
பேரின்ப விளையாட்டு,
களைத்த மனதுக்குக்
கரும்பின் காணிக்கை,
உழைக்கும் மக்களுக்கோ
உயர்வான ஊதியமே!

கவலை மறையுமே
கனிமழலை செய்கையில்,
உவகை தோன்றுமே
உன்னதம் அரும்பிட,
புவனம் மகிழ்ந்திடும்
பூவிதன் மொழியினில்
கவனம் வைத்துமே
காத்திட வேண்டுமே!

சித்திரமாய் வந்திட்ட
சின்னஞ்சிறு குழவியதன்
முத்திரைப் பதிக்கும்
முறுவலின் செயலிது,
வித்தகக் குழந்தை
விரும்பிடும் முறையில்
பித்தாக்கி அன்னையைப்
பிரியமாக வைத்திடுமே!

**கவிஞர்**
**அ. முத்துசாமி,**
தாரமங்கலம்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுமொரு காடு

கடம்பும் பிள்ளைமருதும்
வெண்தேக்கும் ஈட்டியும்
அடர்ந்ததொரு வனப்பேழையில்
பச்சைய மணம் நுகர்ந்து கண்ணயர
வேண்டுமொரு காடு!

உணர்வுகளின் முள் தைத்து
கிழிந்த இதயத்தின்
மௌன முகாரியை புதைத்து
நீலாம்பரியில் கண் துயில
வேண்டுமொரு காடு!

தேவைகளிலிருந்து கழண்டு
கதிரெழுந்தப் பின்னும்
புல்வெளியில் பனித்துளியென
உறங்க வேண்டுமொரு காடு!

சலசலக்கும் மனமொதுக்கி
மனிதருமொதுக்கி
மூங்கிலுரசும் ஒலியிடை
மௌனத்தின் ஒரு துளி ருசிக்க
வேண்டுமொரு காடு!

மனம் தின்னும் கவலை
விட்டகன்று...
அக்காகுருவி சூளகாக்கை
ஆக்காட்டி பனங்காடை
ஆடி நடக்கும் மைனா
கூடி பறக்கும் சிலம்பன்
விழியில் தீயுருட்டும் செம்போத்து
இலை குருவி மாங்குயிலோடு
பறக்க வேண்டுமொரு காடு!

வான் தந்த அதிசயத்தால்
வனத்தின் ரகசியத்தை
வழியெங்கும் முணுமுணுத்து
வேரெங்கும் பயணித்து
நீளுமொரு ஆறோடு அளவளாவி
நடக்க வேண்டுமொரு காடு!

விடு விடு எல்லாவற்றையும் விடு
மரத்தினடி வேரில் மனமற்று
சும்மா உட்கார்ந்திருக்க
வேண்டுமொரு காடு!

**கவிதாயினி**
**கோ. லீலா**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு முதுமையின் செவிக் குறிப்பு!

- கவிஞர் எம் எச் ஏ கரீம்.

நண்பர்கள்
வாயசைக்கிறார்கள்
வார்த்தைகள்
வெளியாவதில்லை
அசைவில்
அறிந்து கொள்ளும்
அனுபவமென்னிடம்!

அயக்க முடியாத
சப்தங்களெல்லாம்
எவரிடமிருந்தும்
எவையிடமிருந்தும்
இப்போது
கேட்க முடியாத்
தவிப்பில் நான்!

திணுக்கெறியும்
அதிர்வுச் சத்தங்களேதும்
இப்போதில்லையென்பதில்
மகிழ்ச்சியெனக்கு!

வானொலிப் பெட்டி
இப்போது
வாயே திறப்பதில்லை!

தொலைக்காட்சிப் பெட்டிகளில்
ஊமைப் படம்
ஓடுகிறது.....

ரகசியமாய்
ஊர்ந்து வரும்
வாகனங்களுக்குள்
கவனமாய்
நகர்ந்து செல்கிறேன்

பத்திரிகைகள் மட்டும்
பழைய படியாய்
என்னுடன்
பேசி மகிழ்கிறது!

நான்
சரியாகவே இருக்கிறேன்
எல்லாமும்தானிங்கே
ஊமையாகிக் கிடக்கிறது!!

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனிசை மழை

பல்வேறு இசைக் குழுக்கள்
வருகை தந்து விட்டனர்
அவர்கள் கற் குவியல்களிலும்
மடு, மட்டைகளிலும்
தானாக மேடையை அமைத்துக்
கொண்டனர்
மழை கொட்டக்கொட்ட
மகிழ்ந்து களிக்கின்றனர்
எனக்குப் பிடித்த புல்லாங்குழலிசை
கேணியின் வடிகாலில் கேட்பதாக
நண்பன் சொன்னான்
விரும்பினால் நீங்களும் கலந்து
கொல்லலாம்
முழு நாளும் இலவசம்
வாருங்கள் போவோம்
எனது செலவில்
இஞ்சிப் பிளேன்டியும்
சுடச் சுட ரொட்டியும் கிடைக்கும்.

**- கவிஞர் டீன் கபூர் -**

•••

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ கவிதைகள்...

1
பார்க்கிறேன் உன் கண்களை
அழகாகிறது
என் அறைக் கண்ணாடி

2
கேட்கிறேன் உன் சொற்கள்
என் இதயம்
வெல்கிறது பூவை

3
நீ செல்கிறாய் ஆற்றோரம்
பார்க்கிறது துள்ளி எழுந்து
மீன்

4
பெய்கிறது மழை
வா நீ வெளியே
உன்னில் நனையட்டும்

5
புன்னகை செய்தாய் நீ
உதிர்ந்த பூ
மீண்டும் மலர்ந்தது

6
உனது கண்களால்
நிலத்தில் நின்ற
நான் விழுந்தேன் ஆகாயத்தில்

7
உன் குரலால்
கூவிக் கொண்டிருந்தது
எனது குயில்

8
உன்னைக் கண்ட சிப்பி
உனது பல்லை
நம்பியது முத்தென்று

9
உனது தமிழை
இரசித்தது
எனது கவிதை

10
வந்து கொண்டிருந்தாய் நீ
நடந்து வந்தது
ஓர் ஆறடிப் பட்டாம்பூச்சி

•••

**- ராஜகவி ராகில் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண் மதிக் கவிதைகள்...

புன்னகைக்கும் போதெல்லாம்
இரண்டாவது இதயமொன்று
உருவாகுவது போல் ஓர் உணர்வு
நெஞ்சுக்குள்...

●●●

பரபரப்பான சூழ்நிலைகளிலும்
எல்லோரையும் பள்ளியறைக்கு
அழைத்துச் செல்கிறது
தூக்கம்...

●●●

நிகழ்வு முடிந்ததும்
கைதட்டல்களும்
கூச்சல்களும்
வற்றிப் போய்விடுகிறது அரங்கத்தில்...

●●●

வரவைப் பறைசாற்றி
அவளின் இருப்பை
உறுதி செய்கின்றன
கொலுசின் சிணுங்கல்கள்...

●●●

நடை பாதையில்
விருப்பமான பாடல்கள் ஒலிப்பதனால்
அங்கேயே விட்டு விட்டு
வந்து விட்டேன்
என் மனதை...

●●●

**- கவிஞர் எம் எம் நவ்பல் -**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் பதிவு

## வெயில் வேளையில் வீடு வந்து சேர்ந்த...

*வெண்ணிலா கவிதை மஞ்சரி.*

நாட்டாரியலில் கிழக்கு மாகாண **வித்தகர் விருதினை** தனதாக்கிக் கொண்ட நாட்டார் கவி நாயகன் –

**– எழுகவி ஜெலீல்.**

இந்திய குமுதம், கல்கி போல அப்பழுக்கற்ற அட்டைப்படங்களுடன் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட இதழ் மூன்றாவதும் நான்காவதும் என்னை வந்தடைந்ததில் மகிழ்ந்து போனேன்.

மறைந்த கலை இலக்கியவாதிகளின் வரலாற்றுக் குறிப்புகளைத் தாங்கிய நினைவேந்தல்களை உட்புற முற்பகுதிகள் அலங்கரிப்பு செய்கின்றன. கட்டமிடப்பட்ட ஆசிரியர் பக்கம் தாண்டி அத்தனையும் கவிதைகள்.

இலங்கை இந்திய உள்ளங்கள் கவிதைகளை யாத்து அனுப்பியிருப்பதானது இவ்விதழ்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளன எனலாம்.

முப்பத்தி இரண்டு பக்கங்களை முழுவதுமாகப் பிரயோகித்து நெஞ்சம் மகிழ மலரும் காலாண்டு இதழாகும்.

மருதமுனையைத் தளமாகக் கொண்டு ஆசிரியர்: கவிஞர் எஸ் ஏ. கப்பார் அவர்களின் இம்முயற்சி பாராட்டத்தக்க ஒன்றாகும்.

மிகவும் குறைந்த விலையில் அறிமுகமான இவ் இதழின் நோக்கமானது வாசிப்பை மேம்படுத்தவும், புதிய பல கவிஞர்கள் உருவாவதற்கும் வழிசமைக்கப் பட்டுள்ளது எனலாம்.

எதிர்வரும் காலங்களில் புதிய பல அம்சங்களை ஈர்த்து கலை மற்றும் இலக்கிய மஞ்சரியாக வலம் வர வேண்டுமென எனதான வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும்.

பேரன்புடன்,
**எழுகவி.**
27.01.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து



வெண்ணிலா வந்தது
வீட்டுக்கு
இலக்கிய வானில் இலங்கும்
வெண்ணிலா - என்
இல்லம் வந்தது.

மனமுவந்த வாழ்த்துகளும் நன்றிகளும்!
**- பாவேந்தல் பாலமுனை பாறூக்.**

வெண்ணிலா கிடைத்தது. தொடர்ந்தும் இவ்விதழ் வெளிவரவேண்டுமென்று பிராத்தித்துக்கொண்டு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.
**- கவிஞர் எம். எம். நவ்பல்.**

வெண்ணிலாவின் அடுத்த இதழ் : 04 விரைவாக வெளியிடப்பட்டமையிட்டு மனம் நிறைந்த வாழ்த்துகள்.
**- ஜலால்டீன் மஹாகவி.**

வெண்ணிலா கவிதை மஞ்சரி இதழ் 04இல் எனது "மண்ணில் உதிராத பூக்கள்" கவிதைத் தொகுதியின் முகப்புப் பக்கத்தை காட்சிப்படுத்தியமைக்காக அதன் ஆசிரியருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
**- கவிஞர் மலீஸ் அமீன்.**

மருதமுனை மண்ணிலிருந்து வெளிவரும் வெண்ணிலா கவிதை மஞ்சரியின் 4வது இதழில் எனது "வேண்டுகோள்"என்ற கவிதையும் இடம்பெற்றிருக்கிறது. மகிழ்வும் நன்றிகளும்.
**- கவிதாயினி மயிலிறகு மனசு ஷிஃபானா.**

இவ்வருடத்திற்கான முதலாவது வெண்ணிலா சஞ்சிகையில் (இதழ்: 4) எனது "உன்னை காதலிக்கிறேன்" கவிதை பிரசுரமாகியுள்ளது. அல்ஹம்துலில்லாஹ். ஆசிரியருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.
**- கவிதாயினி நிஸா இஸ்மாயில்,**

மறைந்த இலக்கிய ஆளுமைகளையும் வாழும் மூத்த இலக்கிய படைப்பாளி களையும் ஞாபகப்படுத்தி, இலக்கிய இளைஞர்களுக்கான சிறந்த குறிப்புகளுடனும் வெண்ணிலா இதழ்: 04 வெளிவந்திருக்கிறது. இலக்கிய ஆர்வலர்கள் வெண்ணிலாவை ஊக்குவிக்க வேண்டுமென வேண்டி நிற்கிறேன்.
**- கவிஞர் மருதூர் ஜமால்தீன்.**

வெண்ணிலா காலாண்டிதழ் 04 இல் எனது கவிதை "நெஞ்சு பொறுக்குதில்லையே!" இடம்பிடித்திருக்கிறது. எனது நண்பர் வெண்ணிலா ஆசிரியருக்கு நன்றிகள்.
**- ஏறூர்க் கவிக்கோ ஏ. ஸீ. அப்துல் றகுமான்.**


"அளவு மீறிய ஆசை" என்ற எனது கவிதை, இதழ் 04 ல் பிரசுரமாகியுள்ளது. DIS நிறுவனத்தினருக்கும் ஆசிரியருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.
**- கவிஞர் சுலைமாலெவ்வை சின்னத்தம்பி.**

வெண்ணிலா என் முற்றமும் வந்தடைந்தது. அதன் குளிர்ச்சியில் நனைந்த சந்தோசம், வாழ்த்துகள்.
**- கவிஞர் ஏ. ஆர். ஏ. சத்தார்.**

பனியோ மழையோ பாராது பறந்து வந்திருக்கிறது, வெண்ணிலா. வாழ்த்துகள்.
**- கவிஞர் சிக்கந்தர் அகமது.**

வெண்ணிலா கவிதை மஞ்சரி சிறப்பாக அமைந்துள்ளது. தொடர்ந்து வெளிவர வாழ்த்துகிறேன்..
**- கவிஞர் த. நடேஸ்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Jesa Grafix

Graphic Designing & Printing

***No. 289, Main Street, Maruthamunai***

**PHOTOCOPY**
**TYPESETTING**
**GRAPHIC DESIGNING**
**OFFSET PRINTING, LAMINATING**
**BINDING, STATIONARY**
**PHONE CARDS**
**RELOADS**
**&**
**MUCH MORE SERVICES**
**at Cheapest rates.**

# 075 656 9393

**jesagrafix24@gmail.com**


noolaham.org | aavanaham.org

## வெண்ணிலா இதழ் 04 முதற் பிரதிகளைப் பெற்றுக் கொண்ட தருணங்கள்



சமூகப்பணியாளர், ஊடகவியலாளர் மற்றும்
மருதமுனை ஆவணக் காப்பகத்தின் ஸ்தாபகர்
**றாசிக் நபாயிஸ்.**




அல் – மருதமுனை சஞ்சிகை ஆசிரியரும்
அகில இலங்கை சமாதான நீதிபதியுமான
**எம். சி. எம். எம். அப்துல் காதிர்.**




ஓய்வுநிலை பயிற்றப்பட்ட
கணித மற்றும் ஆங்கில ஆசிரியர்
**எம். ஏ. எம். ஜலால்டீன்.**



ஆசிரியரும்
டிஜிட்டல் ஓவியருமான
**கவிஞர் டீன் கபூர்.**



சமூகப் பணியாளர், கவிஞர்
**மலீஸ் அமீன்.**



ஓய்வு பெற்ற இ. போ. சபையின் சிரேஷ்ட வீதிப்
போக்குவரத்து, சாலைப் பரிசோதகர் **கே. எம். சரீப்.**

பத்திரிகைச் செய்திகள் மற்றும் புகைப்படங்கள்: கலாபூஷணம் **பீ.எம்.எம்.ஏ. காதர்.**

இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்பொமேசன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் 289, பிரதான வீதி *Jesa Grafix* இல் அச்சிட்டு ஏப்ரல் 2022 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org